# கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளும் இணைந்த கலைகளின் வகிபங்கும்: ஓர் ஆய்வு

து.கௌரீஸ்வரன், B.A(Hons), M.Phil (Drama and Theatre)
விரிவுரையாளர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி.அலை பேசி gowriees@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஈழத்துத் தமிழர்களின் அரங்க வரலாற்றில் 1980 களின் பின்னரான காலம் மிகவும் முக்கியத்துவமுடையதாகத் திகழ்ந்துள்ளது. குறிப்பாக உலகின் பல்வேறு நாடுகளின் அரங்க அனுபவங்களுடன் பகிர்ந்து கொள்ளத்தக்க புதிய அரங்க நடவடிக்கைகள் ஈழத்தமிழர்களின் அரங்கில் கண்டுபிடிக்கப்பட்டு அவை பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளன. 1980 களின் பின்னரான காலகட்டத்தில் மனிதர்கள் எதிர்கொண்ட பல்வேறு சவால்கள் தொடர்பாக உரையாடி வாழ்தலுக்கான நம்பிக்கையினை வலுப்படுத்தும் செயற்பாடாக அரங்கு இயக்கம்கொள்ளும் நிலைமை வலுவடைந்துள்ளது. இதனால் இவ்வரங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆளுமைகள் புதிய அரங்க உத்திகளையும் பிரயோகங்களையும் கண்டடைந்தார்கள். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அரங்கச் செயல்வாதங்களில் மேற்கிழம்பும் விடயங்களுள் ஒன்றாக இணைந்த கலைகளின் பிரயோகம் விளங்குகின்றது.அதாவது அரங்கினை சமூகச் செயற்பாடுகளின் பிரதான ஊடகமாகக் கொண்டு இயங்கிய அரங்கியலாளர்கள் பல்வேறு நுண்கலைகளையும் அவற்றின் உத்திகளையும் நுட்பங்களையும் பயன்படுத்தி களப்பயிற்சி முறைமையூடாகத் தமது அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளமையினை ஆய்ந்தறிய முடிகின்றது. வரைதல், ஆடுதல், பாடுதல், எழுதுதல், விளையாடுதல், சிற்பங்கள் உருவங்கள் செய்தல், கதை கூறுதல், கவி படித்தல், நடித்துக் காட்டுதல், போலச்செய்தல், புதிதளித்தல், வாத்தியங்கள் இசைத்தல் எனப் பல்வேறு கலைகளையும் பிரயோகித்து அரங்கச் செயற்பாடுகளை மேற்கொள்வதானது இங்கு இணைந்த கலைகளின் அரங்கச் செயல்வாதம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.ஈழத்தின் அரங்க வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த நடவடிக்கைகளாக அடையாளங் காணப்படும் கல்வியியல் அரங்கச் செயற்பாடு, பெண்ணிலைவாத அரங்கச் செயற்பாடு, கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாடு முதலியவற்றில் மேற்படி இணைந்த கலைகளின் பிரயோகம் இடம்பெற்றுள்ளமையினை விளங்கிக் கொள்ள முடிகின்றது.இந்த ஆய்வுக் கட்டுரையில் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளில் எவ்வாறு இணைந்த கலைகளின் பிரயோகம் இருந்துள்ளது என்பது ஆராயப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்** - இணைந்த கலைகள், அரங்கச் செயல்வாதம், களப்பயிற்சி

**அறிமுகம் :**

இலங்கையின் வரலாற்றில் 1980 களுக்குப் பின்னரான காலகட்டம் போர்மேகம் சூழ்ந்த காலமாக விளங்கியது. இக்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிவாக வாழ்ந்த வடக்கு கிழக்கு மாகாணங்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகச் செயலிழந்து காணப்பட்டது. இத்தகைய இடர் மிகுந்த காலத்திலும் அரங்கு காலத்தின் தேவையுணர்ந்து பாரிய பங்களிப்பினை வழங்கி வந்துள்ளது. இக்காலத்தில் சருவதேச அரங்க அனுபவங்களுடன் பகிர்ந்து கொள்ளத்தக்க புதிய கண்டு பிடிப்புக்கள் தமிழ் அரங்கிலே நிகழ்ந்துள்ளன. இவ்விதம் நிலைமை இருக்க போருக்குப் பின்னரான காலத்தில் மூன்று தசாப்தங்களாக தமிழ் அரங்க வளர்ச்சி மந்தமடைந்துள்ளதாக பொதுப்புத்தியில் பிரசாரங்கள் முன்வைக்கப்படும் துரதிஸ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே கடந்து போன மூன்று தசாப்த காலத்தில் இலங்கைத் தமிழ் அரங்கில் எத்தகைய கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன இவற்றின் முக்கியத்துவம் எத்தகையது என்பதையிட்டு ஆராய்ந்து கூற வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

**இலக்கிய மீளாய்வு:**

ஈழத்தில் 1980 களின் பின்னர் நடைபெற்ற அரங்கச் செயற்பாடுகள் தொடர்பாக எழுதப்பெற்றுள்ள எழுத்துக்களில் இந்த இணைந்த கலைகளின் பிரயோகம் என்பதனை ஆய்வுப் பொருளாகக் கொண்டு ஆராய்ச்சிகள் நடைபெற்றதாக அறிய முடியவில்லை. மாறாக வெளிவந்துள்ள எழுத்துக்களில் அவை பற்றிய தகவல்கள் பல கூறப்பட்டுள்ளன. எனவே இவ்வாறு காணப்படும் தகவல்களை வைத்து இணைந்த கலைகளின் பிரயோகம் என்கின்ற எண்ணக்கருவாக்கத்தினை உருவாக்கி வெளிப்படுத்த வேண்டியதன் அவசியம் காரணமாக இக்கட்டுரை எழுதப்பெற்றுள்ளது.

**ஆய்வின் மூலங்களும், முறைமையும்**

1980 களின் பின்னர் நடைபெற்ற கல்வியியல் அரங்க நடவடிக்கைகள் பற்றி அறியத் தரும் ஆக்கங்கள் மற்றும் எழுத்துக்களும், ஆய்வாளன் நேரடியாக கல்வியியல் அரங்க நடவடிக்கைகள் பலவற்றில் பங்குபற்றிய அனுபவங்களும், கல்வியியல் அரங்க நடவடிக்கைகளில் பங்குபற்றிய நபர்களுடனான உரையாடல்களும் இவ்வாய்வின் மூலங்களாக உள்ளன.

பங்குகொள் ஆய்வு முறை மற்றும் வரலாற்று ஆய்வு முறை என்பன பிரதான ஆய்வு முறைமைகளாக கொள்ளப்பட்டுள்ளன.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

ஈழத்துத் தமிழர்களின் நவீன அரங்க வரலாற்றில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி 1980 களிலிருந்து மேற்கொள்ளப்படத் தொடங்கிய அரங்கச் செயற்பாடாக கல்வியியல் அரங்கு திகழ்ந்து வருகின்றது.

ஈழத்தமிழர்கள் மத்தியில் கல்வியியல் அரங்கச் செயற்பாடு முக்கியமான பங்கை வகித்து வருகின்றது. முப்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தீர்க்கமான வரலாறும் (எழுதப்படாததாயினும்) அதற்கு உண்டு[1]

மாணவர்கள் குழுநிலையில் பங்குபற்றி விளையாட்டாகவும் கற்றலாகவும் செயற்பாடுகள் மூலமாகத் தங்களது கற்பனைகளை, கருத்துக்களை, உணர்வுகளை வெளிப்படுத்துவது: ஆற்றல்களைக் கண்டுபிடிப்பது, வெளிப்படுத்துவது. கொண்டாடுவது என்பதனூடாக சுயமான படைப்பாக்கத்திறன், சிந்தனைத் திறன், விமரிசன நோக்கு, செயற்பாட்டுத் திறன் என்பவற்றை வளர்த்துக் கொள்ளும் செயல்மையக் கற்றல் முறைமை கல்வியியல் அரங்கின் சாரமாகும்.[2]

இக்கல்வியியல் அரங்கின் முதன்மையானவராகவும் மூத்தவராகவும் இயங்கி வருபவராக குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் விளங்கி வருகின்றார்கள்[3]

இக்கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் அதன் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதகமான விளைவுகளை ஈழத்துத் தமிழ் அரங்கில் ஏற்படுத்தியுள்ளமை கவனத்திற்குரியது. அதாவது ஈழத்தில் ஆக்கபூர்வமான அரங்கக் கலைஞர்கள் பலர் முகிழ்க்க கல்வியியல் அரங்கு கால்கோளிட்டுள்ளது.

எண்பதுகளின் பிற்பகுதிகளில் இருந்து உருவாகி வருகின்ற அரங்கியலாளர்கள் கல்வியியல் அரங்கின் உருவாக்கங்களாகவே இருக்கின்றனர். இவர்களில் கணிசமானவர்கள் ஆசிரியர்களாக இருப்பதன் காரணமாக, பாடசாலைச் சூழலிலும், பல்கலைக்கழகச் சூழலிலும் இவர்களது பணிகள் வித்தியாசமானவையாக அமைகின்றன. மாணவர் மையப்பட்டதும், செயல் மையப்பட்டதுமான அரங்கச் செயற்பாடுகள் இவர்களது வகுப்பறைக் கற்பித்தல் முறைமைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடியும [4]

சிறுவர் அரங்கத் தயாரிப்புக்களில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் அக்கறை ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்தவர்கள் தான் இன்று நாடக அரங்கக் கல்வியோடு சம்பந்தப்பட்டவர்களாகவும், கல்வியியல் நோக்கில் அரங்கினை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும், சமுதாய அரங்கு, கலந்துரையாடல் அரங்கு, திடீர் அரங்கு, கண்ணுக்குப் புலனாகா அரங்கு, சடங்கரங்கு எனப்பல்வேறு

வகையாக அமையும் பிரயோக அரங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அரங்கச் செயற்பாட்டாளர்களாக உள்ளனர்[5]

இவ்வாறு காத்திரமான தாக்கங்களை நிகழ்த்திய கல்வியியல் அரங்கு என்பது 1980 களில் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் புதிய உத்திகளூடாக நாடக அரங்க உருவாக்கங்களை மேற்கொள்ளும் செயற்பாடாக நடைபெற்றுள்ளது.

அதாவது கல்வியியல் அரங்கானது அதன் ஆரம்பத்தில் நாடகத்தின் கரு பற்றித் தீர்மானித்து விட்டுப் பின்னர் மாணவர்களுடன் களப்பயிற்சிகளை மேற்கொண்டு மாணவர்களின் சுதந்திரமான சிந்தனைகளுடனும் செயற்பாடுகளுடனும் நாடகங்களை உருவாக்கும் செயலாகவும் அடுத்த கட்டத்தில் மாணவர்களே கருப்பொருளையும் ஆராய்ந்து விவாதித்து நாடகத்தினை உருவாக்கும் போக்காகவும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

ஆண்டு தோறும் உயர்தர வகுப்பு மாணவர்களோடும் பொறுப்பாசிரியர்களோடும் கலந்துரையாடிய பின்னர்தான் நாடகங்கள் எழுதப்பட்டன. அந்த வகையில் அங்கு மேடையேற்றப்பட்ட எனது நாடகங்களில் பெரும்பாலானவை அவர்களோடு கலந்துரையாடி எழுதப்பட்டவையே ஆகும். நாடகத்திற்கான பாடுபொருள் (கரு) கருத்துக்கள் பலவும் மாணவர்களுடையதாகவே இருந்தன. இவ்வாறு செய்வதன் மூலம் மாணவரும் ஆர்வம் கொள்வதோடு, தாம் நடிக்கும் நாடகம் தமது பங்களிப்போடு எழுதப்பட்டது என்ற உரிமையுணர்வினைப் பெற்று அகமகிழ்வர்.[6]

இத்தகைய அரங்கச் செயற்பாட்டிற்கு புதிதளித்தல் முறைமை, அரங்க விளையாட்டுக்கள், களப்பயிற்சிகள், கலந்துரையாடல்கள் முதலிய அரங்க உத்திகள் அதாவது ஏனைய கலைகளையும் இணைத்துச் செல்லும் போக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

“…கதை, கருப்பொருள், பாத்திரங்கள், நிகழ்வுகள் என்பன கலந்துரையாடல் மூலம் தீர்மானிக்கப்பட்டு பின்னர் புத்தளிப்பு முறைமையில் வார்த்தைகள், செயல்கள், அசைவுகள், பாத்திரப்படைப்பு என்பவற்றையும் பல ஒத்திகைகள் மூலம் வளர்த்தெடுப்பர். ஒவ்வொரு பகுதியும் புத்தளிப்புச் செய்யப்பட்டுப் பின்னர் அதுபற்றித் தம்முள் கலந்துரையாடி மீண்டும் செய்து பார்த்துப் பின்னரும் கலந்துரையாடி.. என்ற படிமுறையில் ஆற்றுகைப் பாடத்தை உருவாக்கிக் கொள்வர். இதற்கான ஒத்திகைகள் ஏறக்குறைய ஒரு மாதம் வரை மேற்கொள்ளப்படும் இத்தகைய நாடகங்கள் சமூகம் எதிர்நோக்கம் பிரச்சினைகளையே பேசும். அவற்றின் தொனி மகிழ்நெறிப் பாங்கானதாகவே பெரும்பாலும் இருக்கும். காத்திரமான விசயங்களை விளையாட்டு வினோதப் பாங்கான தொனியில் நிகழ்த்துதல் என்பது இதன் ஆற்றுகைப் பண்பாக அமையும்.[7]

இவ்விதம் பாடசாலை நாடகங்கள் முகிழ்த்த விதத்தினை அதில் பங்கு கொண்ட நபர்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்

அக்கால கட்டத்தில் எமது பாடசாலை தமிழ்த்தினத்திற்கு ஒரு மேடை நாடகத்தினைச் சிறப்பாக செய்ய வேண்டும் என எமது ஆசிரியர்கள் விரும்பினார்கள். அதற்கு ஆயத்தம் செய்யும் போது எவ்வயதினருடைய எவ்வகையான பிரச்சினைகள், அபிலாசைகள் இருக்கின்றன என அறிய திரு சண்முகலிங்கம் அவர்களால் இரண்டு நாள்கள் நாடகப்பட்டறை நடத்தப்பட்டு எமது மனதிலுள்ள உட்கிடக்கைகள் அனைத்தும் கொண்டு வரப்பட்டு அதன் மூலம் உருவான மேடை நாடகக் கதைத் தொகுப்புத் தான் ஆரொடு நோகேன் இது கற்பனையில் எழுதப்பட்டது அன்று. எம்மாணவர்களிடத்திலும் பெற்றோரிடத்திலும் காணப்பட்ட புரிதலின் இடைவெளியினைத் தத்துருபமாக எடுத்துக் காட்டிய ஒரு அரங்கியல் ஆற்றுகை.[8]

நாடகாசிரியர் குழந்தை ம.சண்முகலிங்கம் தனக்கேயுரிய பாணியிலே நாடகம் நடிக்கப் போகும் மாணவர்களோடு பல நாள்களாகத் தொடர்ந்து உரையாடியதன் பயனாகக் கதைக்கரு தெரிவு செய்யப்பட்டது.[9]

மேற்கண்ட ஆற்றுகை முறைமையில் இருபத்தைந்து முப்பது வருட அனுபவம் பெற்றவர்கள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளில் பாடசாலை அரங்கில் (இடைநிலைப் பாடசாலை) அக்கறை செலுத்த முற்பட்ட

போது ஆற்றுகைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் கலந்துரையாடல் மூலம் ஆற்றுகைக்கான எழுத்துருவை ஆக்கிக் கொள்ளும் முறைமையை ஏற்படுத்திக் கொண்டனர்.[10]

அரங்க விளையாட்டுக்கள், களப்பயிற்சிகள், கலந்துரையாடல்கள் என்ற வகையில் மாணவர்களது சுதந்திரமான சிந்தனையோடும், செயற்பாடுகளோடும்தான் ஒத்திகைகளும், நாடகத் தயாரிப்பின் ஏனைய அம்சங்களான வேட உடுப்பு காட்சி அமைப்பு, ஒப்பனை, இசை என்பனவும் தீர்மானித்துக் கொள்ளப்பட்டன[11]

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறுகளிலிருந்து கல்வியியல் அரங்கு என்பது பல்வேறு புதிய பாதைகளிலும் செல்ல ஆரம்பித்தது. நாடகக்காரர், ஆசிரியர், மாணவர் என்ற கூட்டு முயற்சி விரிவடைந்து மேற்கண்ட மூன்று சாராரோடு காட்சியமைப்பில். ஒப்பனையில், வேட உடுப்பு விதானிப்பில் உதவக்கூடிய ஓவியக் கலைஞர்கள், இசையமைப்பில் வல்ல இசைக் கலைஞர், நடன அமைப்புக்களில் வல்ல நடனக் கலைஞர் என்போரும் கூட்டுச் சேர்ந்து தயாரிப்பில் ஈடுபடும் சில ஆற்றுகை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன[12]

இவ்விதமாக மேற்கொள்ளப்பட்ட கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளில் பங்கெடுத்த மாணவர்களிடையே தாம் ஆற்றுகை செய்யும் விடயம் பற்றிய தெளிவு ஏற்பட்டிருந்தது.

"தாம் நடிக்கும், மேடையேற்றும் நாடகமானது வெறுமனே கற்பனையில் உதித்த ஒன்றல்ல அது தம்மால் இனங்கண்டறியப்பட்ட சமூகப் பிரச்சனைகளுள் ஒன்று என்பதை மாணவர் உணர்ந்து ஊக்கமும் உற்சாகமும் பெற்றனர்."[13]

கல்வியியல் அரங்கின் பிரயோக முறைமைகளால் மாணவர்களின் திறன் விருத்தியில் நிலவிய வேறுபாடுகள் நீக்கமடைந்து சம ஆற்றல்களுடன் மாணவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

"…அரங்க ஆற்றுகைகள் என்பவற்றில் பங்கு கொண்ட மாணவர் அதன் பின்னர் முன்பை விடக் கல்வியிலும் பாடசாலையின் ஏனைய கருமங்களிலும் கூடியளவு ஆர்வத்தோடு ஈடுபட முடிந்ததை எங்கும் காண முடிந்தது. முன்னர் படிப்பிலும் பாடசாலை நிகழ்வுகளிலும் ஆர்வம் காட்டாதிருந்த பல பிள்ளைகள் இரண்டிலுமே ஆர்வம் கொள்ளத் தொடங்கினர்[14]

கூச்ச சுபாவமுள்ளவர்கள் அதிலிருந்து விடுபட்டனர், கதைப்பதற்குப் பின்னின்றவர்கள் சரளமாகக் கதைக்க முற்பட்டனர், ஆடப் பாட அஞ்சியவர் ஆடினர், பாடினர். எதிலுமே தன்னையே முன்னிலைப்படுத்தி நின்ற பலர் ஏனையோருக்கும் விட்டுக் கொடுக்கும் கட்டுப்பாட்டொழுங்கு நிலைக்கு வந்தனர்[15]

ஆக்கத்திறனில் பின்தங்கியிருந்த, தங்கள் மீது நம்பிக்கையற்றிருந்த மாணவிகள் சிலர் இந்த நாடக அளிக்கைகளில் பங்கு கொண்ட பின்னர் படிப்பிலும் ஏனைய சகல துறைகளிலும் உற்சாகமாகப் பங்கு கொண்டு பிரகாசித்துள்ளனர்.[16]

கல்வியியல் அரங்கின் உத்திகளால் ஏற்படுத்தப்பட்ட பெரிய மாற்றம் சமூகப்பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை ஆக்கபூர்வமாக நாடக அரங்கினூடாக உரையாடலுக்குக் கொண்டு வரும் படைப்பாக்கத் திறனுள்ள புதிய தலைமுறைகளின் உருவாக்கமாகும்.

மாணவர்களது கூடுதலான ஈடுபாட்டோடும் ஒத்துழைப்போடும் நாடக எழுத்துருவாக்கமும் மேடையேற்றமும் இடம்பெற்று வந்தமையால் மாணவர்கள் தமது பிரச்சினைகளையும் குடும்பங்களின் பிரச்சினைகளையும் சமூகத்தின் பிரச்சினைகளையும் தெளிவாக அறிந்து கொள்ளவும் அவற்றுக்கான தீர்வுகளை இனங்கண்டு அறிந்து கொள்ளவும் கற்றுக் கொண்டதோடு தமது பிரச்சினைகள் எவ்வாறு நாடகம் என்ற வடிவில் உருப்பெறுகிறது என்பதையும் அறிந்து கொண்டனர். இந்தவாறு சில மாணவர்களும் ஆசிரியர்களும் நாடகம் எழுதவும் ஆரம்பித்தனர். நாடக நடவடிக்கைகளில் ஈடுபடும் யாவரும் நாடகம் எழுத முடியும் என்ற துணிவினை இத்தகைய அரங்கத் தயாரிப்புக்களே பல இளம் நாடக ஆர்வலர்களுக்கு வழங்கின என்பது மறுக்க முடியாத உண்மையாகும்[17]

இவ்விதமாக யாழ்ப்பாணத்தில் 1980 களிலிருந்து பாடசாலைகளை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வந்த கல்வியியல் அரங்கினுடைய எண்ணக்கருவினை அடியொற்றிய அரங்கச் செயற்பாடுகள் 2005,2006,2007 காலப்பகுதியில் கிழக்கிலும் குறிப்பாக மட்டக்களப்பில் ஒரு சில பாடசாலைகளிடையே மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா பெண்கள் பாடசாலையில் 2006,2007 ஆம் ஆண்டுகளில் தரம் பத்து மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்து கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தமிழ் மொழித் தினத்திற்கான நாடகப் போட்டியினை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு இவ்வரங்கச் செயற்பாடுகளை நடத்துவதற்கான வேண்டுகோளை அப்போது அதிபராகக் கடமையாற்றிய திருமதி இந்திராணி புஸ்பராஜா அவர்கள் ஆர்வத்துடன் விடுத்து அதற்கான ஏற்பாடுகளை செய்து தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் 1980 களில் ஆரம்பிக்கப்பட்ட கல்வியியல் அரங்கினூடாக வளர்ந்த நாடக அரங்கச் செயற்பாட்டாளரான சி.ஜெயசங்கர் அவர்களின் வழிப்படுத்தலில் மூன்றாவதுகண் நண்பர்களால் இவ்வரங்கச் செயற்பாடுகள் ஏறத்தாழ இரண்டு மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு நிறைவில் பாடசாலையில் ஓர் அரங்க விழா நடத்தப்பட்டிருந்தது. இது குறித்து இங்கு உருவாக்கப்பட்ட நாடக எழுத்துரு நூலிற்கு வாழ்த்துரை வழங்கிய பாடசாலை அதிபர் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது

எமது மாணவர்களால் போட்டிக்காக மேடையேற்றப்பட்ட நாடகம் மூன்றாவதுகண் உள்;ர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டது. அரங்க ஆற்றுகை என்றால் என்னவென அறியாது இருந்த மாணவருக்கு அரங்க நுட்பங்கள் பற்றி விளக்கவும், அவர்களது ஆக்கத்திறனை வளர்க்கவும் ஒரு பாதை சமைத்துக் கொடுத்த பெருமை இக்குழுவினரையே சாரும். இதில் பங்கேற்ற ஒவ்வொருவரும் மாணவரைக் கலையாற்றல் எனும் சிற்றுளி கொண்டு சிற்பங்களாக உருவாக்கினர் என்றால் மிகையல்ல[18]

இந்த கல்வியியல் அரங்கச் செயற்பாட்டில் பங்குபற்றிய களப்பயிற்சி இணைப்பாளர்களுள் ஒருவராக இந்த ஆய்வினைச் செய்பவரும் இயங்கியமையால் கல்வியியல் அரங்கின் அடிப்படையாகவுள்ள களப்பயிற்சிச் செயன்முறை குறித்தும், புதிதளித்தல் முறைமை குறித்தும் ஆக்க பூர்வமான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

இங்கு நாடக நெறியாளர் என்பவர் நவீன அரங்குகள் அறிமுகப்படுத்தும் நெறியாளரைப் போலல்லாது குறித்த விடயம் சார்ந்த நாடக உருவாக்கத்தின் ஊடாக முதலில் ஆற்றுகைக் குழுவினருடனும், அடுத்து ஏனையவர்களுடனும் ஆக்கபூர்வமான உரையாடல்களை, படைப்பாக்கங்களை மேற்கொள்வதற்கான ஓர் இணைப்பாளராகவே தொழிற்படுவார்[19] என்பதனையும்

செயல்வாத அரங்கில் இணைப்பாளர்களாக செயற்படுபவர்கள் பங்குபற்றுபவர்களைக் கொண்டு அவர்களுக்கூடாக அழகான நாடக ஆற்றுகையினை உருவாக்கிக் கொள்ளும் திறனுள்ளவர்களாக இருக்க வேண்டிய அதே நேரம் தாம் செய்யப் போகின்ற விடயம் சார்ந்த தெளிவான கருத்து விளக்கம் உடையவர்களாகவும் அதுசார்ந்த செயற்பாட்டாளர்களாகவும் வாழ்வதுடன் விடயம் சார்ந்து பங்குபற்றுனர்களுடன் ஆக்கபூர்வமாக உரையாடி நாடகத்தை உருவாக்குகின்ற அனுபவம் உள்ளவர்களாகவும் இருப்பது அவசியமாகின்றது[20]

எனும் விடயங்களையிட்டும் தெளிவான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அத்துடன் களப்பயிற்சிக;டாக அரங்க விளையாட்டுக்களைப் பயன்படுத்தி புதிதளித்தல் முறைமையூடாக அரங்க ஆற்றுகைகளை உருவாக்கிய செயற்பாடுகளில் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் குழுவாகச் சேர்ந்து செயற்பட்டதனைக் காண முடிந்தது. நாடகக் களப்பயிற்சி நடைபெறும் நாட்களில் குறித்த நேரத்திற்கு முன்பதாகவே மாணவர்கள் அதற்குத் தயாரான நிலையில் வளவாளர்களை எதிர்பார்த்துக் காத்து நிற்பதனை அவதானிக்க முடிந்தது.

அரங்க விளையாட்டுக்களும், புதிதளித்தல் முறைமைகளும், பாடலாக்கம், நடனவாக்கம், போலச்செய்தல், கலந்துரையாடல் முறைமைகளும் மாணவர்களுக்கு சுதந்திரமான உணர்வினை வழங்கி அவர்கள் ஆக்கபூர்வமாகச் செயலாற்றுவதற்கு உந்துசக்தியை கொடுத்துள்ளது. இவ்வுத்திகளே மாணவர்களை வளப்படுத்தும் கல்வியியல் அரங்கின் அடிப்படையம்சங்களாக இருந்துள்ளமையினைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்தது. இதனை இந்நாடக உருவாக்கச் செயற்றிட்டத்தில் பங்குபற்றிய ஆசிரியரினதும் மாணவர்களினதும் கருத்துக்கள் வலியுறுத்துகின்றன.

“பெண்களும் மனிதர்கள் என்றுணர…” எனும் நாடகத்திற்கான பயிற்சிகள் வழங்கப்பட்ட போது எமது பாடசாலை மாணவிகள் பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்கள். வெட்கம், கூச்ச சுபாவம் என்பவற்றில் இருந்து விடுபட்டு ஆளுமையுள்ள மாணவர்களாக மாற்றப்பட்டார்கள்.[21]

…நாங்களே நாடகக் கரு ஆசிரியர்களாகவும், கதையாசிரியர்களாகவும், பாடலாசிரியர்களாகவும், இசையமைப்பாளர்களாகவும் திகழ்ந்திருக்கின்றோம் என்றால் நீங்கள் நம்புவீர்களா? ஆனால் அதுதான் உண்மை. இத்தகைய திறமைகள் எவ்வாறு எங்களுக்குள் ஊற்றெடுத்தது என்பதையெண்ண மனம் பிரமிப்பில் ஆழ்கிறது. எங்களுக்குத் தரப்பட்ட கருக்களில் ஒரு விடயத்தை நாங்களே தீர்மானித்து தலைப்பும் இட்டோம். அதுதான் “பெண்களும் மனிதர்கள் என்றுணர…”இத்தலைப்பை ஒரு தலைப்பாக மட்டும் நோக்காமல், நன்றாக ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். இன்று எமது நாட்டில் என்பதைவிட, எமது வீட்டுக்குள்ளே நடக்கும் சமகாலப் பிரச்சினை தான் இது.[22]

சுருங்கச் சொன்னால் கல்வியியல் அரங்கு என்பது இன்றைய சூழலில் மாணவர்கள் எதிர்நோக்கும் தடைகள், இறுக்கங்களை விலக்கி மாணவர்களைச் சுதந்திரமான செயற்பாடுகளிலீடுபட்டு வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களையிட்டு ஆர்வத்துடன் கற்க வைக்கும் மாற்றுக் கல்வி முறைமையாக இருந்துள்ளதனை அறிய முடிகின்றது.

பங்குபற்றல் பண்பையும், சேர்ந்தியங்கும் திறனையும், விமரிசன நோக்கையும், படைப்பாக்கத் திறனையும்,மதிப்பீட்டுத் திறனையும், பயில் முறையினூடாகப் பெற்றுக் கொள்ளும் வகையிலான செயற்பாடாக கல்வியியல் அரங்கச் செயற்பாடு அமைகின்றது. சுருக்கமாகச் சொல்வதானால் ‘செய்வதினூடாகக் கற்றல்’ கல்வியியல் அரங்கின் சாராம்சமாகிறது

மாணவர்களது பங்குபற்றலுடன் விளையாட்டுக்கள், ஆடல்கள், பாடல்கள், உரையாடல்கள் மூலமாக உருவாக்கப்படுகின்ற நாடக ஆற்றுகைகள், அவற்றின் எழுத்துருக்கள், பங்குபற்றுனர் புதிதளித்தல்கள், அனுபவக்குறிப்புக்கள் என்பவை கல்வியியல் அரங்கின் உண்மையான அர்த்தத்தைப் புரிதலுக்குத் துணை செய்யும்[23]

எனவே மேற்படி ஆராய்வினூடாகக் கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளில் இணைந்த கலைகளின் பயன்படுத்துகை உத்தி மூலமாகவே செய்வதனூடாகக் கற்க வைக்கும் நிலைமை காரியமாகியுள்ளதை அறிய முடிகிறது.

ஆகவே முடிவாக பல்வேறு கலை நுட்பங்களைப் பயன்படுத்துதல் என்பது மாற்றுக் கல்வி முறையான கல்வியியல் அரங்கில் அடிப்படையாக இருந்துள்ளமையினை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

**அடிக்குறிப்புக்கள்**

1. து.கௌரீஸ்வரன், த.விவேகானந்தராசா, “பெண்களும் மனிதர்கள் என்றுணர…” நாடக எழுத்துரு, மூன்றாவதுகண் பதிப்பு, 2007, மட்டக்களப்பு, பக்கம் - v மேலது… பக்கம் v

2. சி.ஜெயசங்கர், சண்ணரது கல்வியியல் அரங்கு, மூன்றாவதுகண் பதிப்பு, 2006, மட்டக்களப்பு, பக்கம் - 35 . மேலது... பக்கம் 35. மேலது... பக்கம் 29

3. குழந்தை ம.சண்முகலிங்கம், ஆரொடு நோகேன் நாடகம், அரங்க முற்றம், 2015, யாழ்ப்பாணம், பக்கம் 08

4. சி.ஜெயசங்கர், சண்ணரது கல்வியியல் அரங்கு, மூன்றாவதுகண் பதிப்பு, 2006, மட்டக்களப்பு, பக்கம் -

5. குழந்தை ம.சண்முகலிங்கம், ஆரொடு நோகேன் நாடகம், அரங்க முற்றம், 2015, யாழ்ப்பாணம், பக்கம் - 48 மேலது... பக்கம் - 48

6. குழந்தை ம.சண்முகலிங்கம், ஆரொடு நோகேன் நாடகம், அரங்க முற்றம், 2015, யாழ்ப்பாணம், பக்கம் - 30 மேலது... பக்கம் - 31. மேலது... பக்கம் - 31, மேலது... பக்கம் - 31, மேலது... பக்கம் - 31, மேலது... பக்கம்

7. ஏழு நாடகங்கள், சுண்டிக்குழி மகளிர் கல்லூரி, 1999, யாழ்ப்பாணம், பக்கம் xii

8. சி.ஜெயசங்கர், சண்ணரது கல்வியியல் அரங்கு, மூன்றாவதுகண் பதிப்பு, 2006, மட்டக்களப்பு, பக்கம்

9. து.கௌரீஸ்வரன், த.விவேகானந்தராசா, "பெண்களும் மனிதர்கள் என்றுணர..." நாடக எழுத்துரு, மூன்றாவதுகண் பதிப்பு, 2007, மட்டக்களப்பு, பக்கம் - xii